**<u>District Munsif-cum-Judicial Magistrate Court, Kadaladi</u>.**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
<u>CC.No.25/2019</u>

Name : திருமதி.உமையசுந்தரி
Rank of the witness : PW 4
Husband/Father Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

A1, A2 absent. Petition u/s.317 Cr.P.C filed and allowed.
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of _ 12.10.2023.

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் செவல்பட்டி கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா–1 எனது அண்ணனின் மருமகள். எதிரிகளை தெரியாது.

2. சுமார் 11 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் இரவு எனது பக்கத்து வீட்டில் வசித்து வந்த மாரியம்மாள் என்பவரது நகையை அறுத்து சென்று விட்டதாக அருகில் இருந்தவர்கள் சொன்னார்கள். நானும் மாரியம்மாள் வீட்டிற்கு சென்று விசாரித்தேன்.

3. யார் நகையை அறுத்து சென்றார்கள் என்பது பற்றி தெரியாது. போலீசார் வந்து விசாரித்துக் கொண்டிருந்தார்கள். புகார் மனுவில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையது அல்ல. என்னை போலீசார் விசாரிக்கவில்லை.

<u>பிறழ் சாட்சி:–</u>

(சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதன் அடிப்படையில் அனுமதி அளிக்கப்பட்டது.)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>

நான் வழக்கு சம்பவம் குறித்து அ.சா.1 சொல்லி கேள்விபட்டதாகவும், பின்னர் அ.சா.1 உடன் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்ததாகவும், புகாரில் நான் அறிவேன் சாட்சியாக கையொப்பம் இட்டதாக போலீசார் விசாரித்தபோது சொல்லிவிட்டு தற்போது எதிரிகளின் மிரட்டலுக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.